செ.வெ.எண்.40 நாள். 29.11.2011

**நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நாமக்கல் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையினால் ஏற்பட்ட சேதம் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நிவாரண நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் ஒழுங்கு நடவடிக்கை ஆணையர் (சென்னை) திரு.எஸ்.முருகையா இ.ஆ.ப., அவர்கள் தலைமையிலும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.**

நாமக்கல் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையின் சராசரி மழையளவு 270 மி.மீ., ஆகும். 1.10.2011 முதல் 26.11.2011 வரை 259.30 மி.மீ மழை பெய்துள்ளது. இது சராசரி மழையளவை விட குறைவானதாகும். நாமக்கல் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையின்போது 16 வீடுகள் சேதம் அடைந்துள்ளது. இதற்காக நிவாரணமாக ரூ.65,000 வழங்கப்பட்டுள்ளது. செக்காரப்பட்டி அருந்ததியர் தெருவைச் சேர்ந்த மூர்த்தி என்பவர் சோமனப்பட்டி அருகே திருமணிமுத்தாறு தரைப்பாலத்தை கடந்தபோது ஆற்று வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டு உயிரிழந்தார். இவரது குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.2.00 லட்சம் வழங்கப்பட்டது. இராசிபுரம் வட்டம் ஒடுவன்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த நிதிஷ் (வயது 11) என்ற மாணவன் மின்சாரம் தாக்கி உயிரிழந்தான். இவரது பெற்றோருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.2.00 லட்சம் வழங்கப்பட்டது. மழையின் காரணமாக சேதமடைந்த மாநில சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள், மாவட்ட இதர சாலைகள், ஊராட்சி மற்றும் கிராம சாலைகள் ஆகியவைகளை தற்காலிகமாக பழுது பார்க்கவும், நிரந்தரமாக செப்பனிட்டு சீரமைக்கவும், அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. கொல்லிமலைப்பகுதியில் சிறுபாலம் ஒன்று பழுதடைந்துள்ளது. இதனைப் புதிதாக கட்டுவதற்கும் அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. சுகாதாரத்துறையின் சார்பில் 52 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மழைக்காலங்களில் ஏற்படும் நோய்களை தடுக்கும் வகையில் போதிய அளவிற்கு முக்கிய மருந்துகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. ஊராட்சிகளிலுள்ள அனைத்து மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளின் மூலம் வழங்கப்படும் குடிநீரில் குளோரின் கலந்து வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 12 கூட்டு குடிநீர் திட்டங்கள் செயல்படுகிறது. கூட்டுகுடிநீர் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் குடிநீரில் குளோரின் கலந்து வழங்கப்படுகிறது. மேலும் 3 மாதத்திற்கு உண்டான குளோரின் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தீயணைப்பு துறையில் பயிற்சி பெற்ற நீச்சல் வீரர்கள் வெள்ள காலங்களில் உதவி புரிய தயார் நிலையில் உள்ளார்கள். பொது விநியோக திட்டத்தின் மூலம் காவேரி கரை ஓரங்களில் உள்ள 39 நியாயவிலைக்கடைகளிலும் மற்றும் மாவட்டத்தில் வெள்ள பாதிப்பிற்கு உள்ளாகும் பகுதியில் உள்ள நியாயவிலைக்கடைகளிலும் வெள்ள பாதிப்பிற்காக அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் அனைத்தும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மேலும் தீயணைப்புத்துறையில் அதிக சக்தி வாய்ந்த அவசரகால விளக்குகள் தயார் நிலையில் உள்ளது என சம்மந்தப்பட்ட அலுவலர்கள் தங்கள் துறைமூலம் வெள்ளக்காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கை விவரத்தினை தெரிவித்தனர்.

ஒழுங்கு நடவடிக்கை ஆணையர் திரு.எஸ்.முருகையா இ.ஆ.ப., அவர்கள் கூட்டத்தில் பேசியதாவது: மழைக்காலம் முடியும்வரை அனைத்து துறையினரும் தங்கள் துறையின் மூலம் மேற்கொள்ளப்படவேண்டிய பணிகளை செய்திட தயார் நிலையில் இருக்க வேண்டும். அனைத்து துறை அலுவலர்களின் தொலைபேசி எண்களுடன் கூடிய தகவல் பரிமாற்ற திட்டம் தயாரித்து வைத்திருக்க வேண்டும். மழைக்காலங்களில் குடிநீர் மூலம் பரவும் நோய்களை தடுத்திடும் வகையில் குடிநீரில் குளோரின் கலந்து வழங்கவேண்டும். அதேபோல் மழைக்காலங்களில் தண்ணீரை சுடவைத்து பயன்படுத்த வேண்டும். இதுகுறித்து விழிப்புணர்வை பொதுமக்களிடம் ஏற்படுத்திடவேண்டும். மழைக்காலம் முடியும் வரை அனைத்து துறையினரும் தயார் நிலையில் இருந்து கவனத்துடன் செயல்படவேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி,மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.குழந்தைவேலு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப் பொறியாளர் திரு.செல்வராஜ், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.பி.எஸ்.திருமலைச்சாமி, கோட்ட தீயணைப்பு அலுவலர் திரு.கிருஷ்ணன், துணை இயக்குநர் பொது சுகாதாரம் டாக்டர். சந்திரசேகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல்.